[31st July 1965

SRI M. SUBBIAH CHETTIAR : When granting the licence to the applicants, do the Government examine whether they have got adequate finance and whether they will be able to erect the mill in time?

THE HON. SRI R. VENKATARAMAN : If we went into that, there would have been very little industrial development in this State.

Allotment of Fiat Cars

* 14. *Q.*—SRI M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Fiat Cars allotted for taxi service in the State during 1964-65, district-wise?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement [a] is placed on the table of the House.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, எந்த அடிப்படையை வைத்து இந்தக் கார்கள் மாவட்ட வாரியாக ஒதுக்கப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஹோம் டிபார்ட்மெண்டில் விதிகள் வைத்திருக்கிறார்கள், அது பிரகாரம் பார்த்து அவர்கள் அனுமதிக்கிறார்கள். அந்த விதிகளுக்கு மேல் working rules *போடவில்லை.*

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரையில் டாக்சிக்கு என்று ஒரு Fiat *காரும் ஒதுக்கப்படவில்லை என்ற நிலை சொல்லப்படுகிறது. அதை நீக்க அரசாங்கம் வேண்டுவன செய்யுமா ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : Fiat *கார்தான் கொடுக்கவில்லை. மற்ற கார்கள் கொடுத்திருக்கலாம் அல்லவா ?*

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : Open *மார்க்கெட்டில்* Fiat *காரின் விலை 14 ஆயிரம் வித்தியாசம் இருப்பதால் அதைப் பெறுவதுதான் எல்லோருக்கும் விருப்பம்.*

THE HON. SRI R. VENKATARAMAN : That should not be a ground for the allotment of cars.

திரு. என். வி. நடராசன் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ஒரே ஒரு கார் ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கேள்வி காரைப் பற்றி கேட்டதால் ஒரு தவறான அபிப்பிராயம் நிலவக்கூடும். மொத்தம் நமக்கு Standard Car, Ambassador Car, Fiat Car *இவைகள் டாக்சிக்குக் கொடுப்பதாக இருக்கின்றன. எல்லா*

---

a Printed as Appendix II on page 85.

31st July 1965]

வற்றையும் கணக்குப் பார்த்தால் நம்மிடத்தில் ஏராளமான மனுக்கள் வந்திருக்கின்றன. கொடுக்கக்கூடிய கார்களின் எண்ணிக்கை குறைவு. வந்திருக்கும் மனுக்கள் அதிகம். அதனுல் கூடுமான அளவுக்கு எல்லா ஜில்லாக்களுக்கும் அதைப் பகிர்ந்து கொடுக்கிறோம்.

SRI M. SUBBIAH CHETTIAR : Will the Government make arrangements to get more Fiat Cars in view of the great demand for them in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : We are writing to the Government of India, but I find other people also are writing for Fiat Cars only.

Prohibition of gas cylinders

* 15. *Q.*—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to prohibit the use of gas cylinders by the balloon vendors in the State? 3-10 p.m.

THE HON. SRI P. KAKKAN : No.

திரு. எஸ். கே. சம்பந்தன் : இதனுல் குழந்தைகளின் உயிருக்குக் கூட ஆபத்து இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படியிருந்தால் அதை ஏன் தடை செய்யக்கூடாது?

கனம் திரு. பி. கக்கன் : பொது இடங்களில் இவற்றை உபயோகிப்பதால்தான் அத்தகைய ஆபத்துக்கள் இருக்கின்றன. அது போன்ற இடங்களில் உபயோகிக்கக்கூடாது என்றும் அப்படி உபயோகித்தால் அதைத்தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கலெக்டருக்கும் மற்ற அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல பத்திரிகைகளிலும் நோட்டீஸ் போட்டு இதை சொல்லவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. எஸ். கே. சம்பந்தன் : அந்தத் தடைகள் சரியான முறையில் அனுசரிக்கப்படுகின்றனவா என்று அரசாங்கம் கண்காணிக்கிறதா?

கனம் திரு. பி. கக்கன் : அரசாங்கம் நல்லமுறையில் அவற்றைக் கண்காணிக்கிறது.

திரு. என். வி. நடராசன் : வீதிகள்தோறும் உள்ள பலூன் கடைகள் பல இந்த புகையை உபயோகப்படுத்துவதை அமைச்சர் அறிவார்களா? இதைத் தடுக்க இனி மேலாவது முயற்சி எடுப்பார்களா?

கனம் திரு. பி. கக்கன் : எங்கெங்கு செய்கிறுர்கள் என்று எனக்குத் தெரியாது. பலூன் குழந்தைகள் கையில் வைத்து விளையாடுவதைப் பார்க்கிறோம். பொது இடங்களில் அந்த ஹைட்ரஜன் சாற்றை உபயோகப்படுத்தக்கூடாது என்றும் உபயோகித்தால் தடை செய்யவேண்டுமென்றும் அரசாங்கம் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருக்கிறது.